**செப்டம்பர் – 05**

# TNPSC துளிகள்

❖ குஜராத்தின் கட்ச் பகுதியில் முகேஷ் அம்பானி ஒரு பெரிய சூரிய மின்சக்தி நிலையத்தினை அறிவித்துள்ளார் என்ற நிலையில் இது தினசரி 55 மெகாவாட் சூரிய மின்சக்தி தொகுதிகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி, சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தில் (IATA) இணைந்த நான்காவது இந்திய விமான நிறுவனமாக ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மாறியுள்ளது.

❖ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது, உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் கைபேசிச் சாதனங்களுக்கான இந்தியாவின் முதல் டெம்பர்டு (செம்பதக் கண்ணாடி) கண்ணாடி உற்பத்தி மையத்தினைத் திறந்து வைத்தது.

❖ இந்திய ராணுவமானது மோசமான இமயமலை சூழ்நிலைகளில் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான போருக்குத் தயாராக இருப்பதைச் செயல் விளக்கிக் காட்டுவதற்காக அருணாச்சலப் பிரதேசத்தின் உயரமான காமெங் பகுதியில் யுத் கௌஷல் 3.0 பயிற்சியை நடத்தியது.

# தேசியச் செய்திகள்

## ஆதி வாணி




❖ பழங்குடியினர் விவகார அமைச்சகம் ஆனது, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மொழிபெயர்ப்புச் செயலியான ஆதி வாணியின் பீட்டா வடிவத்தினை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதியன்று அறிமுகப்படுத்தியது.

❖ இந்தச் செயலியானது, பிலி, முண்டாரி, கோண்டி, சந்தாலி, குய் மற்றும் காரோ ஆகிய ஆறு ஆதிவாசி மொழிகளை இந்தி மற்றும் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கிறது.

❖ டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், BITS பிலானி மற்றும் ஐதராபாத் மற்றும் நயா ராய்ப்பூரில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் (IIIT) ஆகியவற்றுடன் இணைந்து ஆதி வாணி உருவாக்கப்பட்டது.

❖ ஒரு லட்சம் பழங்குடியினக் கிராமங்களில் 20 லட்சம் தன்னார்வலர்கள் மற்றும் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு ஆதி கர்மயோகி திறன் மேம்பாட்டு முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இந்தச் செயலி தேசிய அளவில் சோதிக்கப்படும்.


## இணைய அரசு சேவைகளின் ஒருங்கிணைப்பு

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப (MeitY) அமைச்சகத்தின் தேசிய இணைய ஆளுகைப் பிரிவு (NeGD) ஆனது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 1,938 இணைய அரசு சேவைகளை ஒருங்கிணைத்துள்ளது.
- குடிமக்கள் தற்போது சான்றிதழ்கள், நலத்திட்டங்கள், பயன்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் பிற சேவைகளை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தடையின்றி அணுகலாம்.
- மகாராஷ்டிரா மாநிலமானது 254 சேவைகளுடன் முன்னிலை வகிக்கிறது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து டெல்லி 123, கர்நாடகா 113, அசாம் 102, மற்றும் உத்தரப் பிரதேசம் 86 சேவைகளுடன் உள்ளன.
- இந்த ஒருங்கிணைப்பு ஆனது நாடு தழுவிய அளவிலான பொது சேவை வழங்கலில் வசதி மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகிறது.




## பைரவ் படைப் பிரிவுகள்

- இந்திய இராணுவம் ஆனது, ஒவ்வொன்றும் 250 சிறப்பு பயிற்சி பெற்ற வீரர்களைக் கொண்டுள்ள முதல் ஐந்து பைரவ் லைட் கமாண்டோ படைப் பிரிவுகளை உருவாக்குகிறது.
- வழக்கமான காலாட்படை மற்றும் துணை சிறப்புப் படைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக தற்போதுள்ள காலாட்படை படைப் பிரிவுகளில் இருந்து மொத்தம் 23 பைரவ் படைப்பிரிவுகள் உருவாக்கப்படும்.
- மூன்று படைப் பிரிவுகள் ஆனது வடக்கு படைப் பிரிவின் கீழ் செயல்படும் என்பதோடு மேலும் லேவில் 14 படைப் பிரிவிற்கும், ஸ்ரீநகரில் 15 படைப் பிரிவிற்கும், நக்ரோட்டாவில் 16 படைப் பிரிவிற்கும் தலா ஒன்று என அவை நிலை நிறுத்தப்படும்.
- பைரவ் பிரிவுகள் ஆனது காலாட்படைப் பிரிவுகளை விட சிறியதாகவும் செயல்பாடு மிக்கதாகவும் இருக்கும் என்பதோடு மேலும் இது மேம்பட்ட ஆயுதங்கள், சாதனங்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் கொண்டதாகவும் இருக்கும்.




## முக்கிய கனிமங்களுக்கான ஒத்துழைப்பு




- ❖ பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியாவும் ஜப்பானும் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ❖ இந்த ஒப்பந்தம் இரு நாடுகளிலும் உள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- ❖ இந்தப் புதிய ஒத்துழைப்புக் கட்டமைப்பின் கீழ் இந்தியாவும் ஜப்பானும் கூட்டாக முக்கியக் கனிமங்களை ஆராய்ந்து, செயலாக்கி, சுத்திகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

# சர்வதேசச் செய்திகள்

## SCO உச்சி மாநாடு 2025




- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 25வது அரசுத் தலைவர்கள் சபையின் உச்சி மாநாடு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்று சீனாவின் தியான்ஜினில் நடைபெற்றது.
- 2001 ஆம் ஆண்டில் SCO தொடங்கப்பட்டதிலிருந்து ஐந்தாவது முறையாக சீனா இந்த உச்சி மாநாட்டை நடத்தியது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, "Upholding the Shanghai Spirit: SCO on the Move" என்பதாகும்.
- 2025 முதல் 2035 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான பத்து ஆண்டு மேம்பாட்டு உத்தியை ஏற்றுக் கொள்வதில் இந்த உச்சி மாநாடு கவனம் செலுத்தியது.
- பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு ஆகியவை இந்த உச்சி மாநாட்டில் கவனம் செலுத்தப்படும் முக்கியப் பகுதிகளாகும்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) என்பது 2001 ஆம் ஆண்டு ஷாங்காய் நகரில் நிறுவப்பட்ட ஒரு பிராந்திய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- SCO அமைப்பின் தலைமையகம் சீனாவின் பெய்ஜிங்கில் அமைந்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எலத்தூர் ஏரி

- ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் ஏரி, தமிழ்நாட்டின் மூன்றாவது பல் வகைமை கொண்ட பாரம்பரியத் தளமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 37.42 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ள இந்த ஏரியானது, 2002 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் 37(1) என்ற பிரிவின் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- எலத்தூர் ஏரியானது, வலசை போகும் மற்றும் அங்கேயே காணப்படும் பறவைகள் உட்பட 187 வகையான பறவைகளை ஆதரிக்கிறது.
- உச்சகட்ட வலசை போகும் பருவங்களில் 5,000 பறவைகள் வரை இந்த ஏரியில் கூடுகின்றன.

- புல்வெளிக் கழுகு (ஸ்டெப்பி கழுகு) போன்ற அருகி வரும் இனங்கள் மற்றும் ஆற்று ஆலா மற்றும் பெரும்புள்ளிக் கழுகு போன்ற எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனங்கள் இங்கு காணப்படுகின்றன.
- இந்த இடமானது, ஆசிய வெண்கழுத்து நாரை மற்றும் இந்திய வெள்ளை அரிவாள் மூக்கன் போன்ற அருகி வரும் பறவைகளுக்கும் தாயகமாக உள்ளது.
- இதில் ஆழமான மற்றும் ஆழமற்ற நீர்நிலைகள், சதுப்பு நிலம், வறண்ட புதர் நிலம், சேற்று நிலங்கள் மற்றும் பாறை நிலப்பரப்பு போன்ற வாழ்விடங்கள் அடங்கும்.
- இதன் மற்ற பல்லுயிர்ப் பெருக்கத்தில் 38 தாவர இனங்கள், 35 வண்ணத்துப் பூச்சி இனங்கள், 12 தும்பி இனங்கள், 12 ஊர்வன, 7 பாலூட்டிகள் மற்றும் பல்வேறு இரு வாழ்விகள், மீன்கள் மற்றும் முதுகெலும்பில்லாத உயிரினங்கள் அடங்கும்.




## குரோகோதெமிஸ் எரித்ரேயா




- ஓர் அரிய தும்பி இனமான குரோகோதெமிஸ் எரித்ரேயா, தென் மேற்குத் தொடர்ச்சி

மலைகளின் உயரமான பகுதிகளில் காணப் படுவதாக மீண்டும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

- ❖ தாழ்நில வாழ் இனமான குரோகோதெமிஸ் சர்விலியாவுடன் அது கொண்டுள்ள ஒற்றுமை காரணமாக இந்த இனம் முன்னர் தவறாக அடையாளம் காணப்பட்டது.
- ❖ இந்தியாவில் உள்ள குரோகோதெமிஸ் இனத்தில் தாழ்நிலங்களில் காணப்படுகின்ற C. செர்விலியா, மேலும் 550 மீட்டருக்கு மேலான உயரத்தில் மட்டுமே காணப்படுகின்ற C. எரித்ரேயா ஆகிய இரண்டு இனங்கள் உள்ளன.
- ❖ ப்ளீஸ்டோசீன் பனி யுகத்தின் போது C. எரித்ரேயா தென்னிந்தியாவில் குடியேறி மலைப் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கலாம்.
- ❖ C. செர்விலியா இமயமலை மற்றும் தென்னிந்தியாவின் தாழ்நிலப் பகுதிகளில் மிகவும் பரவலாக காணப்படுகின்றது.

## கங்கோத்ரி பனிப்பாறை




- ❖ பருவநிலை மாற்றம் காரணமாக கங்கோத்ரி பனிப்பாறையில் முன்கூட்டியே பனி உருகுதல் ஏற்பட்டுள்ளது என்பதோடு இது பாகீரதி நதிப் படுகையின் நீர் சுழற்சியை மாற்றுகிறது.
- ❖ மத்திய இமயமலையில் பாகீரதி நதிக்கு நீர் அளிக்கும் மேல் மட்ட கங்கைப் படுகையின் மூலமாக கங்கோத்ரி பனிப்பாறை அமைப்பு (GGS) உள்ளது.
- ❖ 1980 முதல் 2020 ஆம் ஆண்டு வரை GGS அமைப்பின் நீண்டகால நீர் ஓட்டத்தை ஒரு சமீபத்திய ஆய்வு பகுப்பாய்வு செய்தது.
- ❖ நீரோட்டத்தில் பனி உருகுதல் ஆனது 64 சதவீதம், பனிப்பாறை உருகல் 21 சதவீதம், மழை நீர் ஓட்டம் 11 சதவீதம் மற்றும் அடித்தள நீர் ஓட்டம் 4 சதவீதம் பங்களிக்கிறது.
- ❖ 1990 ஆம் ஆண்டு முதல், குளிர்கால மழைப்பொழிவு குறைந்து கோடையின் தொடக்கத்தில் உருகுதல் அதிகரித்ததால் ஆகஸ்ட் முதல் ஜூலை மாதம் வரை உச்ச நீரோட்டம் ஆனது முன்னதாகவே மாறியுள்ளது.
- ❖ வெப்பமயமாதல் போக்குகள் இருந்த போதிலும், பனி மூடிய பகுதி இங்கு குறைந்து வருவதால் பனி உருகல் குறைந்துள்ளது.
- ❖ மழைப்பொழிவு நீர் ஓட்டம் மற்றும் அடித்தள நீர் ஓட்டம் 1980 முதல் 2020 ஆம் ஆண்டு வரை அதிகரித்து வரும் போக்குகளைக் காட்டியது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியாவில் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்கள் 2025

- 'பெண்கள் பாதுகாப்புக் குறியீடு (NARI) 2025' ஆனது இந்தியாவின் 31 நகரங்களில் 12,770 பெண்களிடம் கருத்தாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டது.
- கோஹிமா (82.9%), ஐஸ்வால் (70.6%), காங்டாக் (70.4%) மற்றும் இட்டாநகர் (70.4%) நான்கு வடகிழக்கு நகரங்கள் முதல் ஏழு பாதுகாப்பான நகரங்களில் இடம் பெற்றுள்ளன.
- விசாகப்பட்டினம் (72.7%), புவனேஸ்வர் (70.9%) மற்றும் மும்பை (70.2%) ஆகியவை பிற சிறந்த நகரங்களில் அடங்கும்.
- பெண்கள் பாதுகாப்பில் மிகக் குறைந்த தரவரிசையில் உள்ள நகரங்கள் ராஞ்சி (56.3%), ஸ்ரீநகர் (58.1%), கொல்கத்தா (58.2%), டெல்லி (58.5%), ஃபரிதாபாத் (58.7%), பாட்னா (59%) மற்றும் ஜெய்ப்பூர் (59.1%) ஆகியனவாகும்.
- முதல் ஏழு பாதுகாப்பான நகரங்களில் மும்பை மட்டுமே உள்ள அதே நேரத்தில் டெல்லி மற்றும் கொல்கத்தா கடைசி ஏழு இடங்களில் உள்ளன.

**4 N-E CITIES AMONG TOP 7**

**Top Ranked:** Kohima **(82.9%)**, Visakhapatnam **(72.7%)**, Bhubaneswar **(70.9%)**, Aizawl **(70.6%)**, Gangtok **(70.4%)**, Itanagar **(70.4)**, Mumbai **(70.2%)**


**Lowest Ranked:** Ranchi **(56.3%)**, Srinagar **(58.1%)**, Kolkata **(58.2%)**, Delhi **(58.5%)**, Faridabad **(58.7%)**, Patna **(59%)**, and Jaipur **(59.1%)**

# மாநிலச் செய்திகள்

## காலேஸ்வரம் திட்டம்

- தெலுங்கானாவின் காலேஸ்வரம் திட்டத் தடுப்பணைகள் குறித்து நீதிபதி P.C. கோஸ் ஆணையம் 665 பக்க அறிக்கையைச் சமர்ப்பித்தது.
- மெடிகட்டா, அன்னாராம் மற்றும் சுண்டில்லா தடுப்பணைகள் தொடர்பான அனைத்து முடிவுகளும் 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை அப்போதைய முதல்வர் K. சந்திரசேகர் ராவால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.
- நிர்வாக ஒப்புதல்கள் 2016 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று வழங்கப்பட்டன, என்ற நிலையில் மத்திய நீர் ஆணையத்தின் (CWC) அனுமதி இல்லாமல் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டன.
- ஒப்புதல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட பிறகு, 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மட்டுமே விரிவான திட்ட அறிக்கை CWC ஆணையத்திடம் சமர்ப்பிக்கப் பட்டது.

- நீர் மற்றும் மின்சாரம் ஆலோசனை சேவைகள் (WAPCOS) மற்றும் நிபுணர்களால், நீர் ஊடுருவக் கூடிய மண் பற்றிய எச்சரிக்கைகள் இருந்த போதிலும், தடுப்பணைகள் கட்டப்பட்டு அணைகள் அல்லது நீர்த் தேக்கங்களாகப் பயன்படுத்தப்பட்டன.
- கட்டுமான தாமதங்கள் மெடிகட்டாவிற்கு ஆறு, அன்னராமிற்கு ஐந்து, மற்றும் சுண்டில்லாவிற்கு எட்டு என பல நீட்டிப்புகளுக்கு வழிவகுத்தன.
- தெலுங்கானாவில் உள்ள காலேஸ்வரம் திட்டம் முழுவதும் பரவலான நடைமுறை மற்றும் நிதி முறைகேடுகளை இருப்பதை இந்த ஆணையம் கண்டறிந்தது.




## பலவழிப் பாதை கொண்ட தடுப்பிலா போக்குவரத்து சுங்கக் கட்டண முறை




- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது குஜராத்தில் உள்ள NH-48 சாலையில் உள்ள சோரியாசி கட்டணச் சாவடியில் முதல் பல வழிப்பாதை கொண்ட தடுப்பில்லா போக்குவரத்துக் கட்டண (MLFF) முறையைத் தொடங்கியது.

- NHAI ஆணையத்தின் கீழ் உள்ள இந்திய நெடுஞ்சாலை மேலாண்மை நிறுவனம் லிமிடெட் (IHMCL) ஆனது, MLFF முறையை செயல்படுத்துவதற்காக ICICI வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ஹரியானாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலை-44யில் (NH-44) உள்ள கரௌண்டா கட்டணச் சாவடியில் மற்றொரு MLFF அமைப்பு விரைவில் செயல்படுத்தப்படும்.
- நடப்பு நிதியாண்டில் இந்தியா முழுவதும் சுமார் 25 MLFF அடிப்படையிலான சுங்கச் சாவடிகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- MLFF, RFID ரீடர்கள் கருவிகள் மற்றும் தானியங்கி எண் தகடு அங்கீகாரம் (ANPR) கொண்ட ஒளிப்படக் கருவிகள் மூலம் FASTag மற்றும் வாகனப் பதிவு எண் (VRN) அங்கீகாரத்தைப் பயன்படுத்தி தடையற்ற கட்டண வசூலை செயல்படுத்துகிறது.
- MLFF செயல்படுத்தல், சுங்க வருவாய் வசூலை மேம்படுத்துவதையும், சிறந்த மற்றும் திறம் மிக்க தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை உருவாக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மத்ஸ்ய சக்தி திட்டம்




- கேரளாவின் திருவனந்தபுரத்தில் சிறுபான்மை மீனவக் குடும்பங்களை மேம்படுத்துவதற்காக மத்ஸ்ய சக்தி திட்டம் தொடங்கப்பட்டது.
- இது பிரதான் மந்திரி விராசத் கா சம்வர்தன் (PM VIKAS) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகிறது.
- இந்தத் திட்டம் கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்தில் 700 சிறுபான்மை மீனவக் குடும்பங்களை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பு திருவனந்தபுரத்தில் உள்ள சிறுபான்மை மீனவச் சமூகங்களின் வேலைவாய்ப்புகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ரமோன் மகசேசே விருது 2025

- உலகளவில் பெண்களைப் பயிற்றுவிப்பதற்கான அறக்கட்டளை (Foundation to Educate Girls Globally) என்றும் அழைக்கப்படும் Educate Girls, 2025 ஆம் ஆண்டு ரமோன் மகசேசே விருதை வென்றுள்ளது.

- 1958 ஆம் ஆண்டு இந்த விருது தொடங்கப்பட்டதிலிருந்து இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் இந்திய இலாப நோக்கற்ற அமைப்பு இதுவாகும்.
- இந்தியாவின் கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய பெண்களுக்கான கல்வியை ஊக்குவிப்பதில் இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பணியை இந்த விருது அங்கீகரிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் மாலத்தீவின் ஷாஹினா அலி மற்றும் பிலிப்பைன்ஸின் ஃபிளேவியானோ அன்டோனியோ L. வில்லனுவேவா ஆகிய இரண்டு பேருடன் சேர்ந்து Educate Girls அமைப்பு இந்த விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ரமோன் மகசேசே விருது, மாறுதல் மிக்க தலைமையை கௌரவிக்கிறது மற்றும் முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் ரமோன் மகசேசேயின் நினைவாக நிறுவப்பட்டது.
- 1958 ஆம் ஆண்டு முதல், ஆசியா முழுவதிலுமிருந்து 300க்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் இந்த விருதைப் பெற்றுள்ளன.





# இதரச் செய்திகள்

## பிருந்தாவாணி வஸ்திரம்

- 16 ஆம் நூற்றாண்டின் பிருந்தாவாணி வஸ்திரப் பட்டு ஜவுளி, 2027 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தினால் 18 மாதங்களுக்கு தற்காலிகமாக அசாம் அரசிடம் கடனாக வழங்கப்படும்.
- இந்த ஜவுளி, நவ-வைணவ துறவி-சீர்திருத்தவாதி ஸ்ரீமந்த சங்கரதேவாவின் வழி காட்டுதலின் கீழ் நெய்யப்பட்டது மற்றும் கிருஷ்ணரின் வாழ்க்கை காட்சிகளை சித்தரிக்கிறது.
- அசாம் மாநில அரசு தேவையான சுற்றுச்சூழல் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு அருங்காட்சியகத்தை கட்டினால், பிரிட்டிஷ் அருங்காட்சியகம் இதனைக் கடனுக்கு வழங்க ஒப்புக் கொண்டது.




## 2 அமைப்பு தொடர்பு - IMD




- உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் ஆகிய இடங்களில் கனமழை முதல் மிக அதிக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) கணித்துள்ளது.
- தாழ்வு மண்டலப் பகுதி (பருவமழை பள்ளத்தாக்குக்கும்) செயலில் உள்ள மேற்கத்திய இடையூறுக்கும் இடையிலான குறுக்கீடு காரணமாக அந்த அளவிலான மழைப் பொழிவு ஏற்படும்.
- இந்த இரண்டு அமைப்புகளின் குறுக்கீடு, வடமேற்கு இந்தியா முழுவதும் அடுத்த மூன்று முதல் நான்கு நாட்களுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தாழ்வு மண்டலம் தற்போது அதன் இயல்பான நிலைக்கு தெற்கே இயங்குகிறது.

- வடக்கு பாகிஸ்தான் மற்றும் அதை ஒட்டிய பஞ்சாபில் புயல் சுழற்சியின் வடிவத்தில் ஒரு மேற்கத்திய இடையூறு செயலில் உள்ளது.
- இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் காணப்படும் கூடுதல் சுழற்சிகள் அரேபியக் கடல் மற்றும் வங்காள விரிகுடாவிலிருந்து ஈரப்பதத்தை ஈர்க்கின்றன.
- மேற்கத்திய இடையூறு மற்றும் பருவக் காற்று சுழல் அச்சின் இந்த குறுக்கீடு, இமய மலைப் பகுதியில் காற்றுக் குவிப்பு மற்றும் ஈரப்பதம் அதிகரிப்பை அதிகரிக்கிறது.
- உத்தரகாண்டில் உள்ள டேராடூன், தெஹ்ரி, பௌரி, ஹரித்வார், நைனிடால், சம்பாவத், பாகேஷ்வர் மற்றும் உதம் சிங் நகர் மாவட்டங்களுக்கு IMD சிவப்பு எச்சரிக்கை விடுத்து உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★